Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


www.tamilmirror.lk

# தமிழ்Mirror

WEDNESDAY, APRIL 26, 2023

புதன்கிழமை ஏப்ரல் 26, 2023 | ஒளி: 08 கதிர்: 257 | பக்கம்:05 | நகரப்பதிப்பு | FREE

## இலங்கை வெளியேற்றம்




உலகளாவிய ரீதியில் உணவுப் பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளைத் தரப்படுத்தி உலக வங்கி வெளியிடும் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் குறைந்து வருவதால் இலங்கையை இந்தப் பட்டியலில் இருந்து நீக்க உலக வங்கி தீர்மானித்துள்ளது.

உலக வங்கியின் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஒகஸ்ட் மாதம் வெளியான அறிக்கையில் 5ஆவது இடத்தில் இருந்த இலங்கை கடந்த மாதம் வெளியிடப்பட்ட பட்டியலில் 10 ஆம் இடத்துக்கு முன்னேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2



## அம்பாறையில் பிசுபிசுத்தது

பாறுக் ஷிஹான்

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தாலுக்கு விடுத்த கோரிக்கையை அம்பாறை மாவட்ட மக்களில் சிலர் நிராகரித்து வழமையான செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பெரிய நீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, நிந்தவூர், மத்தியமுகாம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடைகள், வீதியோர வியாபாரங்கள், வங்கிகள், சந்தைகள் போன்றவை செவ்வாய்க்கிழமை (25) இயங்கின.

தொடர்ச்சி P2

## ஹர்த்தாலால் வடக்கு, கிழக்கு முடங்கியது

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், வடக்கு, கிழக்கில் நடைபெறுகின்ற பௌத்த மயமாக்கல், ஆலயங்கள் இடிப்பது அல்லது பௌத்த சிலைகளை நிறுவுவது போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் செவ்வாய்க்கிழமை (25) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர



விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன கூட்டாக அழைப்பு விடுத்திருந்தன.

அந்த அழைப்புக்கு வடக்கு, கிழக்கு தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

அதற்கிணங்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 08 மாவட்டங்களில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அம்பாறையில் வழமையான நடவடிக்கைகள் இடம்பெற்றதாக தெரியவந்தது.

தொடர்ச்சி P2

### இனவாதத்தில் அடக்கி, ஒடுக்க நினைத்தால்

# ஒத்துழையாமை இயக்கத்தை அமைப்போம்

### அரசாங்கத்துக்கு சுமந்திரன் எச்சரிக்கை

நாங்கள் பொருளாதாரத்துக்கு ஒத்துழைக்க தயாராக இருக்கும் நேரத்தில் இனவாதத்தில் இன்னும் எங்களை அடக்கி, ஒடுக்க நினைத்தால் நாடு இன்னும் அதளபாதாளத்துக்குள் செல்லும் என்றும் இதனை எவராலும் தடுக்க முடியாது என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் எம்.பி அரசாங்கத்தை எச்சரித்தார்.

அரச இயந்திரம் இனப்பாகுபாட்டை காட்டியவாறு தொடர்ச்சியாக இனவாத நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், தொடர்ந்தும் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்தால், வெகுவிரைவில் ஒத்துழையாமை



இயக்கத்தை அமைக்கவும், சட்ட மறுப்பு போராட்டத்தை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுப்போம் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற குற்றவியல் சட்டத் திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “அரச இயந்திரம் இனப்பாகுபாட்டை காட்டியவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பாராளுமன்றத்திலும் அதனை காணக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கு தொடர்பில் ஏதேனும் கேள்வி கேட்டால் முன்வரிசையில் இருக்கும் அமைச்சரே எங்களை பயங்கரவாதி என்று கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

தொடர்ச்சி P2



## ஆயர்கள் பேரவையிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

2019ஆம் ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் குருணாகல் மறை மாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்டனி ஆண்டகையிடம் அறிக்கை கையளிக்கப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அனுமதியுடன், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடம் கையளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## “சாணக்கியன் புலி”: சபையில் வெடித்தது சர்ச்சை

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை ‘’புலி’’என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறியதால் சபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) வாய்மூல விடைக்கான வினா நேரம் இடம்பெற்றபோது, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அதன்போது, சாணக்கியன் எம்.பி, கேள்வி எழுப்ப முயன்றபோது நேரம் போதாது என்று கூறிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்‌ஷ அனுமதி மறுத்தை அடுத்து, இரு நிமிடங்கள் தருமாறு சாணக்கியன் எம்.பி.

தொடர்ச்சி P2

## கோட்டாவை கொண்டு வரவா இப்ராகிமின் மகனை அனுப்பினார்

கோட்டாவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காகவா இப்ராகிமின் மகனை அனுப்பினார் என்று கேட்கின்றோம் என்றும் இதனை யாரின் தேவைக்காக செய்தீர்கள் என்று இப்ராகிமிடம் அநுரகுமார கேட்கலாம் என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ‘கோட்டா’வில் மாற்றமில்லை

ஏப்ரல் மாதத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் கோட்டாவில் திருத்தம் செய்யப்போவதில்லை என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில், எரிபொருள் ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம், மாதாந்த எரிபொருள் தேவையை பாதிக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### ‘எம்.பி.எக்ஸ்பிரஸ் பேர்ள்’ விவகாரம்:

## வழக்கு தாக்கலை தடுக்க 250 மில். டொலர் இலஞ்சம்

### சபையில் அம்பலப்படுத்தினார் விஜயதாஸ

### அரசியல் மட்டத்தில் தனக்கு சவால் என்கிறார்

‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் நிறுவனம் மீதான வழக்கு தாக்கல் நடவடிக்கைளை தடுப்பதற்காக 250 மில்லியன் டொலரை சாமர குணசேகர என்ற இலங்கையர் இலஞ்சமாக பெற்றுக்கொண்டதாக தகவல் கிடைத்துள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ,

தொடர்ச்சி P2

### மாகாணசபை தேர்தல்

## திருத்த சட்டமூலத்தை சமர்ப்பித்தார் சுமந்திரன்

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான எம்.ஏ சுமந்திரன், பழைய முறையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தக் கூடியவாறான இலகுவான மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை தனிநபர் சட்டமூலமாக செவ்வாய்க்கிழமை (25) சமர்ப்பித்தார்.

சுமந்திரன் எம்.பி சமர்ப்பித்த மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோக ணேசன் ஆதரித்து, வழிமொழிந்து கருத்துகளை வெளியிட்டார். குறித்த மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக சுமந்திரன் எம்.பியினால் முன்வைக்கப்பட்ட நிலையில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2

### விடைத்தாள் மதிப்பீடு

## சங்கத்துக்கு சாதக பதில் அனுப்பினேன்

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்துக்கு மிகவும் சாதகமான பதில் அனுப்பியதாகவும் அதன் பிரகாரம் இந்தப் பிரச்சினை இன்றுடன் நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை



(25) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தொடர்ந்து தாமதிக்கப்பட்டு வருவது தொடர்பாக எதிர்க்கட்சி

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு 126 மொட்டுகள் முட்டு

தற்போதைய அரசாங்கத்தை இறுதி நாள் வரை கொண்டு செல்வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 126க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன



பெரமுனவின் கோட்டே தொகுதி பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேலும் தெரிவித்த அவர், “ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் கொள்ளையடித்ததில்லை; கொலை செய்ததில்லை. எமது கட்சியின் தலைவர்கள் நாட்டுக்காக உழைத்துள்ளனர். ஆனால், நாட்டுக்கு தவறு செய்யவில்லை. அதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

தொடர்ச்சி P2

## சட்ட முறைமைக்கு அமைய வெளிநாடு செல்லுங்கள்

### பொதுமக்களிடம் அமைச்சர் வேண்டுகோள்

மனித கடத்தல்காரர்களிடம் அகப்படாமல் சட்ட வழிமுறைகளுக்கு அமைய வெளிநாடுகளுக்கு செல்லுமாறு பொதுமக்களிடம் வலியுறுத்துவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி ராஜிகா விக்கிரமசிங்க முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், 2020 ஆம் ஆண்டு 15,640 பெண்களும், 2021 ஆம் ஆண்டு 29,314 பெண்களும், 2023 ஆம் ஆண்டின் மூன்று



காலப்பகுதியில் 39,915 பெண்களும் வீட்டு பணிப் பெண்களாக மத்திய கிழக்கு உட்பட பெரும்பாலான நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.

இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து முறையான வழிமுறைகளுடன் வெளிநாடு செல்லும் பணிப் பெண்கள் தொடர்பில் பணியகம் முழுப் பொறுப்பேற்கும்.

இரண்டு வருடகால ஒப்பந்த அடிப்படையில் இலங்கை பணிப்பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக செல்கின்ற போதும் சட்டத்துக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அம்பாறையில்...

இம்மாவட்டத்தில் வழமை போன்று அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது. பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்று பொலிஸாருடன் இணைந்து கடற்படை இராணுவம் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

எனினும் சில இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## சாணக்கியன் ‘புலி’: சபையில்...

வலியுறுத்தவே சுருக்கமாக கேள்வியை கேட்குமாறு பிரதி சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

“கிழக்கு மாகாண ஆளுநர் ஓர் இனத்வாதி, கிழக்கு மாகாண சிங்களவர்களின் பாதுகாவலாராகவே அவர் தன்னை நினைத்துக் கொண்டிருக்கின்றார். ஒருதலை பட்சமாக செயற்படுகிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முறையான அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை. இந்த பிரச்சினைக்கு தீர்வு என்ன?”என்று சாணக்கியன் எம்.பி கேள்வியெழுப்பினார்.

அப்போது நேரம் முடிவடைந்து விட்டதாக பிரதி சாபாநாயகர் கூறிய நிலையில், “காலையிலிருந்து அனைவருக்கும் நேரத்தை தாராளமாக வழங்குகின்றீர்கள், ஆனால் தமிழன், கிழக்கு மாகாணத்தவன் என்பதனால் எனக்கு அனுமதி மறுக்கின்றீர்கள்” என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

இதனையடுத்து, பிரதி சபாநாயகருக்கு சாணக்கியனுக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது “என்னை நீங்கள் உரத்துப்பேசுவதன் மூலமாகவோ அச்சுறுத்தியோ அடிபணியவைக்க முடியாது” என்று பிரதி சபாநாயகர் அடுத்த கேள்விக்கு சென்றார்.

எனினும் சாணக்கியன் எம்.பி. விடாப்பிடியாக கேள்வி கேட்க வேண்டும் என கூச்சலிடவே, “அமைச்சர் பந்துல இணங்கினால் மட்டும் தான் உங்கள் கேள்விக்கு அனுமதி வழங்கப்படும்“ என்று பிரதி சபாநாயகர் தெரித்த நிலையில், சாணக்கியனின் கேள்விக்கு பதிலளிக்க முடியாது என்று அமைச்சர் பந்துல மறுத்தார்.

இந்நிலையில் அடுத்த கேள்விக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பதிலளிக்க முற்பட்டபோது சாணக்கியன் எம்.பி. தொடர்ந்தும் கூச்சலிட்டுக் கொண்டிருந்ததால் அமைச்சர் மனுஷவுக்கும் சாணக்கியனுக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது.

சாணக்கியனைப் பார்த்தது “நீங்கள்தான் இனவாதி. நாம் வடக்கு, கிழக்கு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. நீங்கள்தான் நான் கிழக்கு மாகாணத்தவன் என இனவாதம் பேசுகின்றீர்கள். புலி வெளியே பாய்ந்து விட்டது. புலியின் உண்மை முகம் வெளிப்படுகின்றது. பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உங்களைப் போன்றவர்கள்தான் தடையாக இருக்கின்றார்கள் வாயை மூடிக்கொண்டிருங்கள்” என அமைச்சர் மனுஷ கூறினார்.

இதன்போது எழுந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் எம்.பி.யான எம்.ஏ .சுமந்திரன் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பினார்.

அதில்“சாணக்கியன் எம்.பி.யை அமைச்சர் மனுஷ நாணயக்கார புலி என்கின்றார். மாவட்ட ரீதியான பிரச்சினைகளை சபையில் எடுத்துரைக்கும் போது புலிகள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாராளுமன்றத்தில் உரையாற்றும் வழிமுறைகளை ஆளும் தரப்பு அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும். சாணக்கியனை புலி என்று அவர் கூறுவதனை நீங்கள் அனுமதிக்கின்றீர்களா?” எனக்கேட்டார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சர் ஆற்றிய உரையில் புலி என்ற சொற்பதம் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அதனை ஹென்சாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும்” என்று தெரிவித்ததை அடுத்து, அவ்வாறான வார்த்தைப்பிரயோகத்தை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.

## ஹர்த்தாலால் வடக்கு...

ஏனைய இடங்களில், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் சேவையில் ஈடுபட்ட போதும் வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகள் மூடப்பட்டிருந்தன.

சில பிரதேசங்களில் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் உணவகங்கள் மற்றும் மருந்தகங்கள் திறக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்தது.

# ஒத்துழையாமை இயக்கத்தை அமைப்போம்

நியாயமான முறையில் இருக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அவ்வாறு இருக்காவிட்டால் அதனை வெளிப்படுத்தும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது.

அதனை வெளிப்படுத்தி அதனை பாராது இருக்கும் போது நாங்கள் இப்போது செய்வதை போன்று ஒத்துழையாமை இயக்கத்தை செய்யும் கட்டாயம் எழுந்துள்ளது. கதவடைப்பு மட்டுமன்றி வெகுவிரைவில் சட்ட மறுப்பு போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டியதாக இருக்கும் என்பதனையும் இந்த அரசாங்கத்துக்கு கூறிக்கொள்கின்றோம்” என்று எச்சரிக்கை விடுத்தார்.

“இன்றைய தினம் (நேற்று) வடக்கு, கிழக்கில் முழுமையாக கதவடைப்பு போராட்டம் நடைபெறுகின்றது. இதற்கு காரணங்கள் உள்ளன. பயங்கரவாத

**“ எமது எதிர்ப்பை மீறி அரசாங்கம் செயற்பட்டால் பாரிய சட்டமறுப்பு போராட்டத்திற்கு முகம்கொடுக்க நேரிடும். பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடலாம்**

எதிர்ப்பு சட்டமூலம் இன்றைய தினத்தில் அறிமுகப்படுத்தப்பட இருந்தது. ஆனால் நாட்டிலும், சர்வதேசத்திலும் இதற்கு எதிராக எழுப்பப்பட்ட குரல்களுக்கு பயந்து பிற்போடப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பின்போடுவதால் எந்தப்பலனும் கிடையாது. அது முற்றாக மீள கைவாங்கப்பட வேண்டும். இது மீளக் கைவாங்கப்பட்டால் தற்போதைய பயங்கரவாத சட்டம் தொடர்ச்சியாக இருக்கும் என்று நீதி அமைச்சர் கூறுகின்றார்.

பயங்காரவத தடுப்பு சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும். ஏற்கனவே பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று 2017 ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதியான அன்றைய பிரதமர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உறுதியளித்திருந்தார்.

அவ்வாறு நடந்துகொள்ளாமையினாலேயே ஜீஎஸ்பி வரிச்சலுகை இல்லாமல் போகின்றது. இவ்வாறான நிலைமையிலேயே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்று பின்வாங்கியுள்ளது. ஆனால் இதனை இல்லாது செய்யும் வரையில் எமது போராட்டம் தொடரும்.

காணி அபகரிப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது எதிர்ப்பை மீறி அரசாங்கம் செயற்பட்டால் பாரிய சட்டமறுப்பு போராட்டத்திற்கு முகம்கொடுக்க நேரிடும். பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடலாம் ” என்றார்.

## இலங்கை...

லெபனான் முதலாம் இடத்திலும் சிம்பாப்வே மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களிலும் உள்ளன.

லெபனானில் உணவுப் பணவீக்கம் 261 சதவீதமாகவும், சிம்பாப்வே மற்றும் ஆர்ஜென்டினாவில் உணவுப் பணவீக்கம் முறையே 128 மற்றும் 107 சதவீதமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவை கொண்டு...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற குற்றவியல் சட்டத் திருத்தங்கள் மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், “மிகவும் கோரமான குற்றச் செயலான ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. அது தொடர்பில் நியாயம் கிடைக்க வேண்டும். கத்தோலிக்க மக்களின் துன்பத்தை வைத்து அரசியல் செய்ய நான் இடமளிக்கப் போவதில்லை” என்றார்.

“ஏப்ரல் 21 ஆம் திகதி நீர்கொழும்பை சுற்றி வளைக்கவும் மக்கள் விடுதலை முன்னணியினர் திட்டமிட்டனர். இவர்கள் இப்ராகிமின் வீட்டுக்கு முன்னால் சென்றே போராட்டம் நடத்தியிருக்க வேண்டும். அவரே அவர்களின் தேசியப் பட்டியலில் இருந்தார். அவரின் மகன்களே தாக்குதலில் தொடர்புபட்டிருந்தனர்.

இந்தத் தாக்குதால் ஜனாதிபதித் தேர்தலில் எங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இதனுடன் தொடர்புபட்டவர்கள் யார் என்பதனை அனுரகுமாரவிடம்தான் கேட்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

“கோட்டாவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காகவா இப்ராகிமின் மகனை அனுப்பினார் என்று கேட்கின்றோம். இதனை யாரின் தேவைக்காக செய்தீர்கள் என்று இப்ராகிமிடம் அனுரகுமார கேட்கலாம்.

அனுகுமார அன்று தாக்குதலின் போது கனடாவில் இருந்தார். நான் அமெரிக்காவில் இருந்தேன். ஆனால் நான் ஒருநாளில் வந்துவிட்டேன். ஆனால் அனுகுமார 5 நாட்களின் பின்னரே வந்தார்.

இதனால் ஜே.வி. பியினருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கதைக்க அருகதையில்லை. வேண்டுமென்றால் தாக்குதல் தொடர்பில் விவாதத்திற்கு வருமாறு நான் ஜே.வி.பியினரை அழைக்கின்றேன்”என்றார்.

## வழக்கு தாக்கலை...

செவ்வாய்க்கிழமை (25) தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் எதிராக அரசியல் மட்டத்தில் சவால் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் உண்மையை பொலிஸார்தான் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 27இன் கீழ் 2 இல் சபையில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “2021 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பாதிப்புக்கான நஷ்டஈடு தொடர்பில் துறைசார் நிபுணர்கள் இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாதிரிகளுக்கு அமைய கப்பல் விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு 6.4 பில்லியன் டொலர் நஷ்டஈடு பெற்றுக்கொள்ள முடியும் என்று இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் இடைக்கால பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்கு சிங்கப்பூர் நாட்டு வணிக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் ஏனைய உணர்வுபூர்வமான விடயங்களை பகிரங்கப்படுத்த முடியாது.

நஷ்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் குறித்த கப்பல் நிறுவனத்தால் சாமர குணசேகர இலங்கையருக்கு 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

ஆனால் அதற்கு சாட்சியம் கிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் எனக்கு எதிராக அரசியல் மட்டத்தில் சவால் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளேன். உண்மையை பொலிஸார்தான் கண்டுபிடிக்க வேண்டும் ,நானல்ல” என்றார்.

## சட்ட முறைமைக்கு...

அமைய வெளிநாடு செல்லுமாறு பல அறிவுறுத்தல்களை விடுத்தாலும் ஒரு தரப்பினர் மனித கடத்தல் வியாபாரிகளிடம் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் வெளிநாடுகளுக்கான மனித கடத்தல் குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல்,சட்டத்துக்கு முரணான வகையில் வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள இலங்கை பெண்களை மனிதாபிமான அடிப்படையில் நாட்டுக்கு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மட்டத்தில் தாதியர் சேவையில் 36 ஆயிரம் மில்லியன் தாதியர்களுக்கான கேள்வி காணப்படுகிறது. முறையான பயிற்சிகளுடன் இலங்கை தாதியர்களுக்கு உலகளாவிய மட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள இலங்கை மருத்துவம் மற்றும் தாதியர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திருத்த சட்டமூலத்தை சமர்ப்பித்தார்...

சட்டமூலத்தின் முதல் வாசிப்பு செவ்வாய்க்கிழமை (25) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலமாகவே இது சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சங்கத்துக்கு சாதக...

உறுப்பினர் வீரசுமன வீரசேகர எழுப்பிய இடையீட்டு கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித் அவர், விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் 4 கோரிக்கைகளில் 3 கோரிக்கைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்தாகக் கூறினார். வரி தொடர்பான கோரிக்கையை திறைசேரிக்கு அனுப்பியதாகவும் தனது வரையறைக்குள் தன்னால் முடிந்த தீர்வுகளை பெற்றுக்கொடுத்தாகவும் குறிப்பிட்ட அமைச்சர், அதன்பயனாக பிரதான பரிசோதகர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார் என்றார்.

ஏனைய நடவடிக்கைகளும் இன்று (நேற்று) ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு கிடைக்கப்பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் கடிதத்தின் பிரதிக்கு மிகவும் சாதகமான பதில் அனுப்பியதாகக் குறிப்பிட்டார்.

## ‘கோட்டா’வில்...

இது குறித்து அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் சுட்டிக்கா ட்டப்பட்டிருந்தன.

நாளாந்த எரிபொருள் விநியோகத்தை திருத்தப்பட்ட புதிய கோட்டா பாதிக்கவில்லை என்றும், திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் இருந்ததைப் போல் உள்ளதாக தரவு காண்பிப்பதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், எரிபொருள் ஒதுக்கீட்டின் அதிகரிப்பு காரணமாக கியூஆரை தவறாக பயன்படுத்துவது குறைந்துள்ளது என்றும் கியூஆர் பயன்படுத்தும் நடைமுறைக்கு மக்கள் பழக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது கார்கள், விசேட தேவை வாகனங்களுக்கு 30 லீற்றரும், முச்சக்கர வண்டிகளுக்கு 08 லீற்றரும், மோட்டார் சைக்கிள்களுக்கு 7 லீற்றரும், பஸ்ஸுக்கு 60 லீற்றரும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு 126 மொட்டுகள் முட்டு

அமைதியான போராட்டத்தின் முடிவில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கடத்தினார்கள். மக்களை பழிவாங்க சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்று, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விஷம் குடித்து இறக்கின்றனர். போராட்டத்தின் மூலம் இன்னொரு குழுவைக் கண்டுபிடித்தனர்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர். அந்த நேரத்தில் எங்கள் ஆட்கள் சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஜனாதிபதி பதவியையும் பிரதமர் பதவியையும் பகிர்ந்து கொள்ள ஒப்பந்தம் செய்தார்கள்.

தயவுசெய்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவும். அந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை நாங்கள் முன்னெடுத்தோம், மஹிந்த ராஜபக்சவின் ஆசியுடன் தினேஷ் குணவர்தன பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ஒரு வருடத்திற்குள் சவால்களை முறியடித்தார். 126க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்த அரசாங்கத்தை வழிநடத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவுகின்றோம். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற விரும்புகிறோம்.

சிலர் இந்த ஆற்றலை உடைக்க முயற்சி செய்கிறார்கள். சமீபகாலமாக மஹிந்த பிரதமராக முயற்சிப்பதாக ஒரு கதை வந்தது. இதுபற்றி அவரிடம் கேட்டேன். தினேஷை பிரதமராக நியமித்தோம். எனவே தினேஷை ஏன் மாற்றுகின்றோம் என மஹிந்த தெரிவித்தார்.

இப்போது சஜித் பிரேமதாச பிரதமராக வருவார் என்பதுதான் லேட்டஸ்ட் செய்தி. இது எங்களை உடைக்கப் பார்க்கிறது. கடைசி நாள் வரை இந்த அரசாங்கத்தை கொண்டு செல்ல அதிகபட்ச ஆதரவை வழங்குவோம். தவறு செய்து கட்சிக்கு வந்தவர்கள் இன்று வெளியே வந்து எங்களை விமர்சிக்கின்றனர். ஆனால் கட்சி தொடங்கியவர்கள் இன்றும் நம்முடன் இருக்கிறார்கள்.

கிராமத்தை கட்டியெழுப்ப விரும்பாதவர்கள் தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டது. 88/89 காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தனது மகனை மிஹின்லங்காவில் வைப்பதற்காக மஹிந்தவுடன் ஒப்பந்தம் போட்ட ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இன்று என்ன சொல்கிறார்? ” என்றும் கூறினார்.

# ராஜனின் வீட்டின் மீது தாக்குதல்

## ஹர்த்தாலுக்கு ஆதரவு திரட்டியதன் எதிரொலி என சந்தேகம்

வி.ரி சகாதேவராஜா

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வீடு, திங்கட்கிழமை (24) நள்ளிரவு தாக்குதலுக்கு உள்ளானது.

பெரிய நீலாவணைப் பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்கு நள்ளிரவு ஒரு மணி அளவில் வந்த கோஷ்டி, பிரதான வாயிலை உடைத்து உள்நுழைந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.



சம்பவம் குறித்து சந்திரசேகரன் ராஜன் தெரிவித்ததாவது; நேற்றுமுன்தினம் இரவு நானும் மனைவியும் மகனும் நித்திரையில் இருந்த பொழுது, திடீர் திடீரென சத்தங்கள் கேட்டன. நேரத்தை பார்த்தேன் ஒரு மணி ஐந்து நிமிடமாக இருந்தது. மெதுவாக எழுந்து மின்விசிறியை நிறுத்திவிட்டு, யன்னல் வழியாக வாயிலைப் பார்த்தேன். வழமையாக பிரதான வாயிலில் மின்குமிழ் எரிந்து கொண்டிருக்கும். ஆனால், அத்தருணம் அது எரியவில்லை. ஆகவே, விளங்கிவிட்டது எமது வீடுதான் தாக்குதலுக்கு இலக்காகுகின்றது என்று. அதனால், அச்சத்துடன் மகனின் வாயை பொத்திக்கொண்டு, வீட்டுக்குள்ளே இருந்தேன். சுமார் பத்து நிமிடங்கள், எமது வீட்டுக்கு வெளியிலும் சிங்களத்தில் சிலர் கதைத்துக் கொண்டிருந்ததை ஓரளவுக்கு கேட்கக் கூடியதாக இருந்தது.

பத்து நிமிடத்துக்குப் பிற்பாடு, சத்தம் குறைந்ததும் அருகிலுள்ள நண்பர்களிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டதும், அவர்கள் எனது வீட்டுக்கு வந்தார்கள். அதன் பிறகு, நானும் வெளியில் வந்தேன். அப்பொழுதுதான், 'கேட்' உடைக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது.

உடனே, நீலாவணைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசி எடுத்தேன். அவர் அந்த வேளையில் எடுக்கவில்லை. விடிந்ததும் அங்கு சென்று முறைப்பாடு செய்தேன். இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளேன் என்றார்.

சந்திரசேகரன் ராஜன், நேற்றைய வடக்கு, கிழக்கு ஹர்த்தாலுக்கு கல்முனை பிராந்தியத்திலுள்ள கடைகளில் ஆதரவு தருமாறும், கடைகளை அடைக்குமாறும் கோரி பிரசாரம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் எதிரொலியாக இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## நுவரெலியாவில் 4 மாடிகளுக்கு மேல் கட்டுவதற்கு தடை



நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தளமாடிகளுக்கு மேற்பட்ட புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது 2023.05.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும். இதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இந்த யோசனையை ஜனாதிபதியே சமர்ப்பித்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முறையற்ற வகையிலான அபிவிருத்திகள் காரணமாக நுவரெலியா நகரத்தின் அழகிய தோற்றம் படிப்படியாகக் குன்றி வருவதுடன், அதன்மூலம் சுற்றுலாத்துறைக்குப் பெரும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

ஆகையால், நுவரெலியா சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்கும், புதிய கட்டட நிர்மாணங்களுக்கான ஒழுங்குபடுத்தல்களுக்காக மத்திய மாகாண ஆளுநரின் தலைமையிலான செயலணியொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சமாதான நீதவானுக்கான கடிதங்கள் கையளிப்பு



கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமாரின் சிபாரிசின் ஊடாக பி. நவராஜ்குமார், பள்ளகெட்டுவ சேர்ந்த கே. சிவகுமார், வெலிமடை குருத்தலாவ சேர்ந்த ஜே. அமீர்தீன், பூனாகலை சேர்ந்த ஆர். ரமேஸ்குமார், வெலிமடை பொரகஸ் ஆசிரியை திருமதி ஏ.எல்.எம் நில்மினி தமயந்தி ஆகியோருக்கான சமாதான நீதவானுக்கான நியமனக் கடிதங்களை பதுளை பணிமனையில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (23) கையளிக்கப்பட்டன.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## சிறிய நீர்ப்பாசன குளங்கள் அபிவிருத்தி

சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசன குளங்களை அபிவிருத்தி செய்தல், அதனால் மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துதல் என்ற நோக்கில் உலக வங்கியின் நிதி அனுசரணையில் விவசாய அமைச்சின் திட்ட அமலாக்கத்துடன் நீர்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவை நடைமுறைப்படுத்தி வரும் சிறிய நீர்ப்பாசன குளங்கள் அபிவிருத்தி வேலை 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இந்த வேலைத்திட்டம் தொடர்பான கூட்டம் நேற்று (25) காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் முழுமையான விளக்கத்தை உட்கட்டுமான அபிவிருத்தி நிபுணர் ஆர். சஞ்சிவன் வழங்கினார். குறித்த இத்திட்டமானது 2024 ஆம் ஆண்டு நிறைவடைய உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பேராறு, மண்டைக்கல்லாறு ஆற்றுப்படுக்கைகளை மையமாகக் கொண்டு சிறு நீர்ப்பாசன குளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ம.கி. வில்வராஜா, மாவட்ட பிரதம கணக்காளர், உலக உணவுத்திட்டத்தின் மாவட்ட அலுவலகர் திருமதி ஜெயபவாணி, மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதி நீர்பாசன பொறியியலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள், வனவள திணைக்களத்தின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## குப்பிழான் ஐ. சண்முகன் காலமானார்

எஸ். தில்லைநாதன்



இலங்கையின் புகழ்பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான 'குப்பிழான் ஐ. சண்முகன்' என்ற புனைபெயரில் அறியப்பட்ட ஐயாத்துரை சண்முகலிங்கம் (வயது 77) திங்கட்கிழமை (24) காலமானார்.

ஆசிரியரான இவர் 'கோடுகளும் கோலங்களும்', 'சாதாரணங்களும் அசாதாரணங்களும்', 'உதிரிகள்' உட்பட ஐந்து சிறுகதை தொகுதிகள், 'பிரபஞ்ச சுருதி' என்ற கவிதை நூல் என்பவற்றை வெளியிட்டுள்ளதுடன் ஏராளமான விமர்சனங்கள், அறிமுகங்கள், பத்திகள், குறிப்புகளையும் எழுதியுள்ளார்.

தனித்துவமான கதைக்களம், கதை சொல்லும் பாணிக்கு புகழ்பெற்றவரான குப்பிழான் ஐ. சண்முகன் 'கலாபூசணம்', ஆளுநர் விருது, பேராதனை பல்கலைக்கழகத்தின் 'சங்க சான்றோன்' போன்ற பெருமைக்குரிய பல விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## விக்னேஸ்வராவுக்கு 200

திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வித்தியாலய அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் (24) திருகோணமலை பிரதான வீதியின் ஊடாக நடைபவனி இடம்பெற்றது. இந்த நடைபவனி, தமிழர் பண்பாட்டு நிகழ்வுடன் இடம்பெற்றமை சிறப்பாகும்.

அ. அச்சுதன்

### புதுக்குடியிருப்பில்

## போதைப்பொருளை கட்டுப்படுத்த கலந்துரையாடல்

### பொலிஸார் மீது குற்றச்சாட்டு

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான போதைவஸ்து தொடர்பிலான கலந்துரையாடல் திங்கட்கிழமை (24) நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச கிராம அபிவிருத்தி கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான இந்த விசேட கலந்துரையாடலில், போதைப்பொருளை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசண்டையாக செயற்பட்டு வருவதாக, கிராம மட்ட அமைப்புகள் குற்றம் சாட்டினார்கள்.

பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம இளைஞர்கள் எதிர்நோக்கும் போதைப்பொருள் துரித பரவல் தொடர்பில், சிறப்பு ஆலோசகர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ப.சத்தியரூபனால் ஆராயப்பட்டது.

பிரதேச மட்டத்தில் போதைப்பொருளின் பாவனை, உற்பத்தியை இயன்றளவு குறைக்கவும் அவற்றை கிராம மட்டத்தில் செயற்படுத்தவும் கலந்தாலோசிக்கப்பட்டது.



## ஜெர்மனிக்கு செல்வோருக்கு சட்ட உதவி

### முட்மன் கோறன்பிளோ சட்ட நிறுவனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் திறந்துவைப்பு

நிதர்சன் வினோத்

பல்வேறு பிரச்சினைகளுடன் ஜேர்மனிக்கு வருகை தந்தவர்களில் இரண்டு இலட்சம் இலங்கை மக்களுக்கு, எமது சட்ட நிறுவனம் சேவை வழங்கியமையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என முட்மன் கோறன்பிளோ சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன்பிளோ தெரிவித்தார்.

தென்னாசியாவின் இரண்டாவது அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்த பின்னர், நேற்று முன்தினம் (24) யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதோ அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது ஜெர்மன் சட்ட நிறுவனமானது தென்னாசியாவின் கிளையை கொழும்பில் அண்மையில் திறந்து வைத்தது. அதன் தொடர்ச்சியாக வட மாகாணத்துக்கான கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளோம்.

1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சட்ட நிறுவனமானது, இலங்கையில் இருந்து வந்த பலரின் குடியேற்றத்துக்கான இலவச ஆலோசனைகளையும் தேவை ஏற்படின் குறைந்த கட்டணத்தில் நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்து வெற்றி கண்டது.

இலங்கையில் இருந்து ஜேர்மனி நாட்டுக்குள் பிரவேசித்தவர்களில் சுமார் இரண்டு இலட்சம் பேரின் வழக்குகளை எமது நிறுவனமே கையாண்டுள்ளது. எமது நிறுவனத்தின் பணி புரியும் சட்டத்தரணி எம்.டி.எஸ் இராமச்சந்திரன் இலங்கையைச் சேர்ந்தவர். இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நன்கு அறிந்தவராக இருப்பது, வழக்குகளை இலகுவாக கொண்டு செல்வதற்கு உதவியாக இருந்தது வருகிறது.

ஆகவே, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள எமது சட்ட நிறுவனத்தின் ஊடாக, ஜெர்மன் நாட்டுக்குள் வருகை தரவுள்ள மாணவர்கள், வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிப்போர், சுற்றுலா விசாக்களில் வருகை தருவோர் இலவசமான சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழ்மையான மக்களுக்கு வழங்குங்கள்

புதிய வரி திருத்தத்துக்கு எதிராக பரவலாக எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அறிமுகப்படுத்திய வரியை மீளப்பெறவோ அல்லது குறைக்கவோ அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், நமது நாட்டில் பணம்படைத்தவர்கள், ஏழைகள் என்ற இரண்டு பிரிவினர் மட்டுமே உள்ளனர். மத்திய தர வர்க்கம் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றது.

செல்வந்தர்கள் கட்டாயம் வருமான வரி உள்ளிட்ட வரிகளைச் செலுத்தவேண்டும்; ஏழைகளுக்கு அது தேவையில்லை. எனினும் அறிமுகப்படுத்தப்படும் அத்தனை வரிகளுக்குள்ளும் மத்தியத்தர வர்க்கத்தினர் சிக்கிக்கொள்வர்.

இந்நிலையில், அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்துரைத்த அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, “வருமான வரியை குறைக்குமாறு எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் அவற்றை நிறைவேற்ற முடியாது” என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்திருக்காவிடின், பொருளாதார படுகுழிக்குள் விழுந்துகிடந்த நாட்டை கொஞ்சமேனும் தூக்கியிருக்க முடியாது. நிதியத்தின் நிபந்தனைகளை அமல்படுத்திய போதெல்லாம், மேலே குறிப்பிட்ட மத்திய தர வர்க்கத்தினரே கடுமையாக பாதிக்கப்பட்டனர். இன்னுமே பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் உலகத் தரமான வங்கிக் கொள்கைகளின்படி செயற்படும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் ஒழுங்கு உள்ளது. வருமானம் ஈட்டும் போது வரிகள் தொடர்பாக எந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் முறைசாரா முறையில் வரிகளைக் குறைக்க முடியாது என்றும் அமைச்சர் கூறியிருக்கின்றார். அப்படியாயின், அந்தவரி அப்படியேதான் இருக்கும்.

பொருளாதார நெருக்கடியால், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் ஏழ்மையான மக்கள், பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 20 இலட்சம் மக்கள் உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் நிவாரணமாக மாதாந்த கொடுப்பனவை வழங்கும் தீர்மானம் வரவேற்கத்தக்கது.

அந்தக் கொடுப்பனவு, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அனைவருக்கும் கிடைக்கவேண்டும். அரசாங்கத்தின் கொடுப்பனவுகள் பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலகுவில் கிடைப்பதில்லை. எந்தவோர் உதவியாக இருந்தாலும் சரி, பெருந்தோட்ட மக்கள் குறிப்பாக தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் பாரபட்சம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள், உயர்மட்டங்களின் கவனத்துக்குக் கொண்டு சென்று நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க வழிசமைக்க வேண்டும். பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் அங்கு கடமையாற்றும் அதிகாரிகளில் பலர், அதே பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். ஆக, தங்களுடைய மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நினைப்பில் அவ்வாறான அதிகாரிகள் செயற்படவேண்டும். சிறு,சிறு விடயங்களை வைத்து தட்டிக்கழித்துவிடக்கூடாது. சாதாரண தொழில்புரியும் மக்களை அலைக்கழித்துவிடக்கூடாது என்பதையும் நினைவூட்டுகின்றோம்.

நாட்டின் பல செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. இவை கடனில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை கவனத்தில் கொண்டு, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழ்மையான மக்களின் மேம்பாட்டுக்கு, ஆகக்கூடுதலாக அர்ப்பணிக்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கருணைகூர்ந்தால் எதிரிகளும் நண்பர்களாகி விடுவார்கள். எதிரிகளாக இருப்பவர்கள் தொடர்ந்தும் எதிரிகளாக இருக்கவேண்டியதில்லை.

நெஞ்சம் ஒரே நிலையில் இருப்பதில்லை; அடிக்கடிமாறும். எனவே, மனத்தை மென்மையானதாக ஆக்குங்கள்! நேயத்துடன் வாழ்ந்தால் நெஞ்சம் விரிவடையும்.

நீடித்த பகைகளால் நிம்மதி கெடுகின்றது. இணைந்து வாழ்ந்தால், பேதம் அறுபடும். எவரும் தங்கள் தவறுகளை உணராமல், மற்றையவர்களைப் பற்றியே ஆராய்ந்த வண்ணம் இருப்பார்கள். தங்களின் உண்மை நிலையை அறிந்தால், செய்த தப்புகளை உணர்வார்கள்.

தாங்கள் பேசுவதும் செய்வதுமே நியாயமானது என வாதிடுபவர்கள் தவறுகளுடனே வாழுகின்றார்கள். எதிரிகளைச் சம்பாதித்தல் இலகுவானது. ஆனால், நல்ல நண்பர்கள் கிடைப்பது அதிர்ஷ்டமானது.

நல்ல நண்பன் சரியானவற்றை மட்டும் சொல்வான். தவறுகளைச் சுட்டிக்காட்டி, நல்ல வழியில் இட்டுச் செல்வான்.

மக்களுடன் இணைந்து வாழ்ந்தால், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்வார்கள். சமூக முரண்பாடு பதற்றத்தை உருவாக்கும். அமைதி வழி சிரமமானது அல்ல! புரிந்துணர்வு பயன் அளிக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

தேசிய அரசாங்கம்

# நாட்டுக்கா, ஜனாதிபதிக்கா?



எம்.எஸ்.எம் ஐயூப்

தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுக்கும் இவ்வாரம் அழைப்பு விடுப்பார் என, கடந்த வாரம் செய்திகள் வெளியாகி இருந்தன.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையை ஏப்ரல் 25ஆம் திகதி (நேற்று) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது, இந்த அழைப்பை விடுக்கவிருப்பதாக ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்தார் என்று, தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், கடந்த வாரம் ‘டெய்லிமிரர்’ பத்திரிகையிடம் தெரிவித்திருந்தார்.

கணேசனும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஜனாதிபதியை சந்தித்த சந்தர்ப்பம் ஒன்றிலேயே, ஜனாதிபதி இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். பின்னர் அந்த உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் இன்று (26) வரை ஒத்திவைக்கப்பட்டது. அதாவது, இடையில் ஏதாவது மாற்றங்கள் இடம்பெற்று இருக்காவிட்டால், தேசிய அரசாங்கம் பற்றிய அழைப்பை ஜனாதிபதி இன்று அல்லது நாளை விடுக்கக்கூடும்.

சித்தாந்த ரீதியிலோ அல்லது சட்ட ரீதியிலோ அல்லாது, சாதாரண அர்த்தத்தில் தேசிய அரசாங்கம் என்றால், சகல அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து நடத்தும் அரசாங்கம் என்ற உணர்வுதான் ஏற்படுகிறது.

ஆனால், இலங்கையில் சட்டப்படி, தேசிய அரசாங்கம் என்பது அவ்வாறான ஒன்றல்ல! அரசியலமைப்பின்படி தேசிய அரசாங்கம் என்றால், ‘பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, ஏனைய கட்சிகளுடன் அல்லது சுயேச்சை குழுக்களுடன் இணைந்து அமைக்கும் அரசாங்கமாகும்’ என்பதாகும்.

விந்தை என்னவென்றால், இந்த வரைவிலக்கணம் ‘அரசியலமைப்பில் அமைச்சர்களின் எண்ணிக்கை’ என்ற விடயத்தின் கீழ் வருவதாகும். அதாவது, அமைச்சரவையில் 30 அமைச்சர் மட்டுமே இருக்கலாம் என்று கூறிவிட்டு, தேசிய அரசாங்கமாக இருந்தால், இந்த எண்ணிக்கையை பாராளுமன்றமே தீர்மானிக்கும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. அதைத் தவிர, தேசிய அரசாங்கம் எதற்காக என்பதைப் போன்ற எந்த கருத்தும் அதில் இல்லை. அதாவது, அமைச்சர்களை அதிகரித்துக் கொள்வதற்காகவே தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கரு அரசியலமைப்பில் புகுத்தப்பட்டுள்ளது.

அது எவ்வாறாயினும், அரசியலமைப்பிலுள்ள அந்த வரைவிலக்கணத்தின்படி, நடைமுறையில் இப்போதும் தேசிய அரசாங்கம் ஒன்றே இருக்கிறது என்று வாதிடலாம். 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது, 145 ஆசனங்களை வென்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து சுமார் 40 உறுப்பினர்கள் இப்போது ஆளும் கட்சியிலிருந்து விலகி இருந்த போதிலும், அதேபோல், பொதுஜன பெரமுன அறுதிப் பெரும்பான்மையை இழந்த போதிலும் பொதுஜன பெரமுனவுக்கே இன்னமும் பாராளுமனறத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிது. 54 ஆசனங்களை வென்ற இரண்டாவது பெரிய கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு இப்போது சுமார் 50 ஆசனங்களே இருக்கின்றன. பொதுஜன பெரமுனவுக்கு பெரும்பான்மை பலம் இருப்பது போலவே, அக்கட்சி இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே ஆட்சியை நடத்தி வருகிறது. எனவே, நடைமுறையில் தேசிய அரசாங்கம் ஒன்றே இருக்கிறது.

ஆயினும், தமது தலைமையின் கீழ் செயற்பட்டு வந்தவர்கள், தம்மை விட்டுப் பிரிந்து அமைத்துக் கொண்ட கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் தமது தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்வதே, தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் ஜனாதிபதி செய்யப் போகிறார் என்றே தெரிகிறது.

இதில் இரண்டு நோக்கங்கள் இருக்கலாம். ஒன்று, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற முறையில் தமக்கு இருந்த அதிகாரத்தை சிதைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களைப் பழிதீர்ப்பதாகும்.

இரண்டாவது, தற்போது வாக்கு வங்கியே இல்லாமல் இருக்கும் தமது கட்சியின் வாக்கு வங்கியை வளர்த்துக் கொண்டு, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகும்.

அவற்றைத் தவிர, தேசிய அரசாங்கம் என்ற பெயரில் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளை, அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்வதில் ஜனாதிபதி அக்கறை செலுத்தவில்லை. மக்கள் விடுதலை முன்னணி அவ்வாறு அரசாங்கத்தில் சேரப் போவதுமில்லை. அதேபோல் சேர்ந்தாலும், அக்கட்சியிடம் மூன்றே மூன்று ஆசனங்கள் தான் இருக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்தில் இணையப் போவதாக அண்மைக் காலமாக வதந்திகள் பரவி வருகின்றன. குறிப்பாக, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாஷிம் ஆகியோர் அரசாங்கத்தில் சேரக்கூடும் என்று பலர் கூறுகின்றனர். இதற்குக் காரணம், அவர்கள் அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான உடன்பாட்டை முழுமையாக இல்லாவிட்டாலும் ஆதரிப்பதாகும்.

அந்த உடன்படிக்கையில் இருக்கும் வரித் திட்டத்தையும் இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பதையும் தாம் ஆதரிக்காவிட்டாலும், பொதுவாக அந்த உடன்படிக்கையை தாம் ஆதரிப்பதாகவும் ஜனாதிபதியும் ஐ.ம.சவின் கொள்கைகளையே பின்பற்றுகிறார் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். எனவேதான், இவர்கள் அரசாங்கத்தில் சேரலாம் என்றதொரு கருத்து பரவியிருக்கிறது.

ஆயினும், மக்கள் ஆதரவோ ஆணையோ இல்லாத அரசாங்கத்தைத் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று கலாநிதி ஹர்ஷ டி சில்வா புதன்கிழமை (19) ஊடகங்களிடம் தெரிவித்தார். ஆணை எவ்வாறாயினும், ஆதரவு இல்லாத கட்சியில் இணைவது, எந்தவோர் அரசியல்வாதியினதும் எதிர்காலத்துக்கு உகந்ததாக அமையாது. எனவே, சிலவேளை கலாநிதி சில்வா கூறுவது உண்மையாகவும் இருக்கலாம்.

அண்மையில், அரசியல் கட்சிகளுக்கான மக்கள் ஆதரவு தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளையும் அவர்கள் கருத்தில்கொண்டு இருப்பார்கள். அந்தக் கருத்துக்கணிப்புகளின்படி, ஆளும் கட்சிகளான ஐ.தே.கவையும் பொதுஜன பெரமுனவையும் சுமார் நான்கு சதவீத மக்களே ஆதரித்தனர்.

அதேவேளை, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாஷிம் ஆகிய மூவரும், பொருளியல் அறிவு உள்ளவர்களாவர். கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி, இலங்கைக்கான உதவித் திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அங்கிகரித்த போது, ஏதோ பிரச்சினைகள் தீர்ந்ததைப்போல் ஆளும் கட்சியினர் பட்டாசுக் கொழுத்தி மகிழ்ந்தாலும், நாணய நிதியத்தின் திட்டத்தின் மிகுதிப் பகுதி மிகவும் கடினமானது என்று அவர்களுக்குத் தெரியும்.

ஊழலை தடுப்பது உள்ளிட்ட அந்தத் திட்டத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில்தான், இலங்கைக்கான மிகுதி கடன் தவணைகளை நாணய நிதியம் விடுவிக்கும். அதேவேளை, வெளிநாட்டுக் கடன்காரர்கள் தமது கடன் மறுசீரமைப்பது தொடர்பாக முடிவான வாக்குறுதிகளை இன்னமும் வழங்கவில்லை. அத்தோடு அவர்கள் இலங்கையின் உள்நாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும் என்கின்றனர். அதன் மூலமாக, நாட்டின் வங்கி அமைப்புமுறை எவ்வாறு பாதிக்கப்படும் என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் கீழ், ஊழியர் சேமலாப நிதியத்திடம் அரசாங்கம் பெற்றிருக்கும் கடனில் ஒரு பகுதியை கழித்துவிட்டால், அதன் மூலம் ஊழியர்களும் பாதிக்கப்படுவார்கள். இதுபோன்ற பல பிரச்சினைகள் காரணமாக, அரசாங்கத்திடம் முண்டியடித்துக்கொண்டு ஓடவேண்டிய அவசியம் இல்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே, ஹர்ஷ போன்றோர்கள் அரசாங்கத்தில் சேர்வார்களா என்பது சந்தேகமே!

ஆனால், தமக்கு சுகாதார அமைச்சை வழங்கினால் தாம் அதனை ஏற்றுக் கொள்வதாக ஐ.ம.ச எம்.பி டொக்டர் ராஜித்த சேனாரத்ன கூறியிருக்கிறார். அதாவது, அவர் அமைச்சுப் பதவிக்காக கட்சி தாவத் தயாராக இருக்கிறார்.

கடந்த பொதுத் தேர்தலில், ஐ.தே.க மாவட்ட ரீதியில் ஓர் ஆசனத்தையேனும் வெற்றி பெறவில்லை. தேசிய பட்டியல் மூலம் மட்டுமே ஓர் ஆசனம் அக்கட்சிக்கு கிடைத்தது. அதற்குக் காரணம், ஐ.தே.கவின் வாக்கு வங்கி மொத்தமாகவே ஐ.ம.சவிடம் சென்றடைந்தமையாகும்.

எனவே, தமக்கு இனி அரசியல் எதிர்காலமே இல்லை என்று நினைத்த ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவை கலைத்துவிட நினைத்ததாக முன்னாள் அமைச்சர் நவின் திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார். ஆனால், கோட்டாபய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு, ரணில் பிரதமராக பதவி ஏற்றதன் பின்னர், அவருக்குள் மீண்டும் நம்பிக்கை வளர்ந்தது. கோட்டாபய ராஜினாமாச் செய்தால், பிரதமரான தாமே, ஜனாதிபதி என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே, மக்கள் போராட்டத்தை ஆதரிப்பதாக, பிரதமரானதன் பின்னரும் அவர் உண்மையாகவே தான் கூறியிருக்க வேண்டும்.

எனினும், அவருக்கு மற்றொரு முறை ஜனாதிபதியாவதற்கு மக்கள் ஆதரவு இல்லை. பொதுஜன பெரமுன அவரை தமது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் என்ற உத்தரவாதமும் இல்லை. அடுத்த வருட இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது. அதற்குள் அரசாங்கமும் ஜனாதிபதியும் மேலும் மக்களின் வெறுப்புக்கு உள்ளாகவும் கூடும். எனவேதான் அவர் ஐ.ம.சவை இப்போதே கைப்பற்றிக் கொள்ள திட்டமிடுகிறார் போலும்!

அண்மையில், ஐ.ம.சவின் சில உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேர முயல்வதாக வதந்தி பரவவே, தனி நபர்களாக அல்லாமல் கட்சியாகவே எவரும் அரசாங்கத்தில் சேரலாம் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அவ்வாறு, ஐ.ம.ச அரசாங்கத்தில் சேர்ந்தால், அதன் உறுப்பினர்களை ஐ.தே.கவுக்குள் உள்வாங்கிக்கொள்வது இலகுவாகும். தேசிய அரசாங்கம் அதற்காகத் தான் என்று ஊகிக்கலாம்!

## கடிதங்கள்

### கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை:

# பழுமடைந்த நிலையில் விடுதி மலசல கூடங்கள்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் விடுதிகளில் உள்ள மலசல கூடங்கள் பழுத டைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றைப் புனரமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட பொது வைத்தியசாலையானது, பல்வேறு வசதி குறைபாடுகளுடன் தொடர்ச்சியாக இயங்கி வருவதுடன், பல்வேறு முக்கிய தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒரு வைத்தியசாலையாக காணப்படுகிறது.

குறிப்பாக, வைத்தியசாலை விடுதிகளில் இருக்கின்ற 20 க்கும் மேற்பட்ட மலசல கூடங்கள், திருத்தி அமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. அத்துடன், நோயாளர் விடுதிகளிலும் பல குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதுடன் பல்வேறு தேவைப்பாடுகள் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகிறது.


இந்த நிலையில், தற்போது 20 வரையான மலசல கூடங்களைப் புனரமைப்பதற்கு எட்டு மில்லியன் ரூபாய்க்கு அதிகமான நிதி உடனடியாகத் தேவைப்படுவதாக வைத்தியசாலை தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

எனவே, வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் நலன் மற்றும் ஆரோக்கியம் கருதி, மலசல கூடங்களை விரைந்து புனரமைக்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

யது பாஸ்கரன்

சென்னை

# 3 பேருக்கு 3டி மூலம் அறுவை சிகிச்சை



தலையில் அடிபட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு 3டி தொழில்நுட்ப உதவியுடன் நியூரோ பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, உயிர் காக்கும் நடவடிக்கையாக, நரம்பியல் அறுவை சிகிச்சை துறை தலைவர் எம். கோட்டீஸ்வரன் தலைமையில் கதிரியக்கவியல் துறை மருத்துவர் தேவி மீனாள், மயக்கவியல் துறை மருத்துவர் சந்திரசேகரன் கொண்ட குழுவினர், 3 பேரின் தலையிலும் ஒரு பக்க மண்டை ஓட்டை அகற்றி, இரத்தக் கசிவை சரிசெய்தனர். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, அகற்றப்பட்ட மண்டை ஓட்டுக்கு பதிலாக செயற்கையான மண்டை ஓட்டை வைக்க மருத்துவர்கள் திட்டமிட்டனர்.

புதுடெல்லி



## “மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டுகள் தீவிரமானவை”

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீதான பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக பொலிஸார் எஃப்ஐஆர் பதிவு செய்ய இந்திய மல்யுத்த வீராங்கனைகள் தாக்கல் செய்த மனு மீது பதில் அளிக்கும்படி புதுடெல்லி பொலிஸாருக்கு உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (25) நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

பிரிஜ்பூஷன் சிங்கிற்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது விளையாட்டுத் துறை அமைச்சகம் குறுக்கிட்டு விசாரணை ஆணையம் அமைத்தது. மேரி கோம் தலைமையிலான ஆணையம் விசாரணை அறிக்கையையும் தாக்கல் செய்துவிட்டது. எனினும், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சாட்டி, மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் புதுடெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், பாலியல் குற்றச்சாட்டு புகார் தொடர்பாக மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்படவேண்டும் என்று கோரி, ஏழு மல்யுத்த வீராங்கனைகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். அதனை விசாரணைக்கு எடுத்த போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.



புதுடெல்லி

## ஆண் வேடமிட்டு மணமகன் மீது அசிட் வீசிய காதலி

சத்தீஸ்கர் மாநிலம், பஸ்தார் பகுதியில் திருமணத்தன்று மணமேடையில் மணமகன் அமர்ந்திருக்க, சுற்றி அவரது நண்பர்கள், உற்றார் - உறவினர்கள் இருந்துள்ளனர். அப்போது அதே மணமேடையில் திடீரென ஆண் ஒருவர் ஏறினார். திருமண நிகழ்வில் அவரை சரியாக யாரும் கண்டிராத நிலையில், தனது கையில் மறைந்து வைத்திருந்த அசிட்டை மணமகன் மீது சட்டென்று வீசிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

தொடர்ந்து ஒரு கும்பல் மணமகனை காப்பற்ற முற்பட, மற்றொரு கும்பல் அசிட் வீசிய நபரை பிடிக்க முயன்றனர். ஆனால், அந்த அசிட் வீச்சால் மணமகன் மட்டுமின்றி அங்கிருந்த உறவினர்கள் சுமார் 10 பேர் காயமடைந்தனர்.

அந்தப் பெண்ணிடம் அசிட் வீச்சுக்கான காரணத்தை பொலிஸார் கேட்டபோது, மணமகனும், அந்தப்பெண்ணும் பல வருடங்களாக காதலித்து வந்துள்ளனர். ஆனால் திடீரென வீட்டில் பார்க்கும் பெண்ணை அவர் திருமணம் செய்ய எண்ணி, இந்தப் பெண்ணை தவிர்த்து வந்துள்ளார். இவர் எவ்வளவு கெஞ்சியும் அவர் கேட்கவில்லை. அதனையடுத்தே ஆண் வேடமிட்டு காதலன் மீது ஆசிட் வீசியதாக அப்பெண் தெரிவித்துள்ளார்.

திருச்சூர்

## அலைபேசி வெடித்து சிறுமி மரணம்

எட்டுவயதான சிறுமி அலைபேசியில் வீடியோ பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அலைபேசி வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது. இதில் சிறுமி படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம், கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டம் திருவில்வமலையில் இடம்பெற்றுள்ளது.

மோசமான பட்டரி காரணமாக அலைபேசி வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது. இது குறித்து பாசயனூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறனர்.



இந்தோனேசியா

## சுமத்ராவில் நிலநடுக்கம்



இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா தீவில் செவ்வாய்க்கிழமை (25) அதிகாலையில் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.3ஆக பதிவானது. இதனையடுத்து, இந்தோனேசியா நாட்டில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டதால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டது.

இதையடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் எச்சரித்தனர். இதனால் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து உடனடியாக வெளியேறினர். எனினும், இரண்டு மணி நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.



இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 492 ஓட்டங்களை குவித்த அயர்லாந்து

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து, கேர்ட்டிஸ் கம்பரின் 111, போல் ஸ்டேர்லிங்கின் 103, அணித்தலைவர் அன்டி போல்பிரயனின் 95, லொர்கன் டக்கரின் 80, அன்டி மக்பிரயனின் 35 ஓட்டங்களோடே நேற்றைய இரண்டாம் நாளில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், பிரபாத் ஜெயசூரிய 5, அசித பெர்ணாண்டோ, விஷ்வ பெர்ணாண்டோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ரமேஷ் மெண்டிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



ஐந்தாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

## பாகிஸ்தானை வென்ற நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான ஐந்தாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் பாகிஸ்தான் வென்றதோடு, அடுத்த போட்டியில் நியூசிலாந்து வென்றதோடு, நான்காவது போட்டி கைவிடப்பட்ட நிலையில், ராவல்பின்டியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், மொஹமட் றிஸ்வான் ஆட்டமிழக்காமல் 98 (62), இஃப்திஹார் அஹ்மட் 36 (22), இமாட் வஸீம் 31 (14) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பிளையர் டிக்னர் 4-0-33-3, இஷ் சோதி 4-0-21-1, அடம் மில்ன் 4-0-31-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், மார்க் சப்மன் ஆட்டமிழக்காமல் 104 (57), ஜேம்ஸ் நீஷம் ஆட்டமிழக்காமல் 45 (25) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இமாட் வஸீம் 4-0-21-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் மார்க் சப்மன் தெரிவானார்.



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு


## ரஹானேயை மீள அழைத்த இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு அஜின்கியா ரஹானேயை இந்தியா மீள அழைத்துள்ளது.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், செட்டேஸ்வர் புஜாரா, விராட் கோலி, அஜின்கியா ரஹானே, லோகேஷ் ராகுல், கே.எஸ். பாரத் (விக்கெட் காப்பாளர்), இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், ஷர்துல் தாக்கூர், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், உமேஷ் யாதவ், ஜெய்தேவ் உனத்கட்.

முகாமையாளர் பதவி தொடர்பில்

## பொச்செட்டினோவுடன் மேம்பட்ட பேச்சுகளில் செல்சி



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முகாமையாளராவது தொடர்பில், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளர் மௌரிசியோ பொச்செட்டினோ கழகத்துடன் மேம்பட்ட பேச்சுக்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நடப்பு பருவகால முடிவு வரை பிராங்க் லம்பார்ட் முகாமையாளராக இருந்து பின்னர் அவரை பொச்செட்டினோ பிரதியிடுவதே செல்சியின் திட்டம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.பி.எல்: சண்றைசர்ஸை வென்ற கப்பிட்டல்ஸ்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஹைதரபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கப்பிட்டல்ஸ்

கப்பிட்டல்ஸ்: 144/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மனிஷ் பாண்டே 34 (27), அக்ஸர் பட்டேல் 34 (34), மிற்செல் மார்ஷ் 25 (15), டேவிட் வோர்னர் 21 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: வொஷிங்டன் சுந்தர் 3/28 [4], புவ்னேஷ்வர் குமார் 2/11 [4], தங்கராசு நடராஜன் 1/21 [3], உம்ரான் மலிக் 0/14 [2])

சண்றைசர்ஸ்: 137/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மாயங்க் அகர்வால் 49 (39), ஹென்றிச் கிளாசென் 31 (19), வொஷிங்டன் சுந்தர் ஆ.இ 24 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 2/21 [4], அன்றிச் நொர்கியா 2/33 [4], குல்டீப் யாதவ் 1/22 [4], இஷாந்த் ஷர்மா 1/18 [3])

போட்டியின் நாயகன்: அக்ஸர் பட்டேல்

இந்நிலையில், பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 26 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.